# பன்னிரண்டாந் திருமுறை

**பெரியபுராணம்~சேக்கிழார் சுவாமிகள்**

திருச்சிற்றம்பலம்

இராகம்–மத்தியமாவதி

உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்

ஐந்துபே ரறிவும் கண்களே கொள்ள
  அளப்பரும் கரணங்கள் நான்கும்
சிந்தையே யாகக் குணமொரு மூன்றும்
  திருந்து சாத்துவிக மேயாக
இந்துவாழ் சடையான் ஆடும் ஆனந்த
  எல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்தபேர் இன்ப வெள்ளத்துள் திளைத்து
  மாறிலா மகிழ்ச்சியில் மலர்ந்தார்.

மண்ணிற் பிறந்தார் பெறும்பயன் மதிசூடும்
அண்ணலார் அடியார்தமை அமுது செய்வித்தல்
கண்ணினால் அவர்நல்விழாப் பொலிவுகண் டார்தல்
உண்மை யாம்எனில் உலகர்முன் வருகென உரைத்தார்.

என்று மின்பம் பெருகும் இயல்பினால்
ஒன்று காதலித் துள்ளமும் ஓங்கிட
மன்றுளார் அடியார் அவர் வான்புகழ்
நின்ற தெங்கும் நிலவி உலகெலாம்



# திருப்புகழ்

**அருணகிரிநாதர்**

இராகம் - நாட்டை    தாளம் - ஆதி

கைத்தல நிறைகனி அப்பமொ டவல்பொரி
  கப்பிய கரிமுகன் அடிபேணி
கற்றிடும் அடியவர் புத்தியிலுறைபவர்
  கற்பக மெனவினை கடிதேகும்
மத்தமும் மதியமும் வைத்திடும் அரன்மகன்
  மற்பொரு திரள்புய மதயானை
மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
  மட்டவிழ் மலர்கொடு பணிவேனே
முத்தமிழ் அடைவினை முற்படு கிரிதனில்
  முற்பட எழுதிய முதல்வோனே
முப்புரம் எரிசெய்த அச்சிவன் உறைரதம்
  அச்சது பொடிசெய்த அதிதீரா
அத்துய ரதுகொடு சுப்பிரமணிபடும்
  அப்புன மதனிடை இபமாகி
அக்குற மகளுடன் அச்சிறு முருகனை
  அக்கண மணமருள் பெருமாளே